நாள் 01.08.2023

அ வ எண் 33/2020

வா சா 1 தாமஸ்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வா சா ஆ 2 ஆக தாவா சொத்திற்கான பட்டாவைதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா சா ஆ 2 ஆவணத்தில் முதல் பட்டாதாரர் பெயர் என்ன போடப்பட்டுள்ளது என்றால், 1. மாடக்கண் நாடார் மகன் ராஜன்துரை, 2. மாடக்கண் நாடார் மகன் திரவியம் 3. மாடக்கண் நாடார் மகன் பால்ராஜ் என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவர்கள் மூன்று பேருக்கும் தாவா இடத்தில் சொத்து கிடையாது தவறான முறையில் பட்டா போடப்பட்டுள்ளது. 2வது பட்டாதாரர் திரவியம் ஊரில்தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். வழக்கு 1ம் பிரதிவாதியின் இளைய சகோதரர் திரவியம் என்றால் சரிதான். ராஜன் துரை என்பது இவ்வழக்கு 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பால்ராஜின் மகன் 3ம் பிரதிவாதி சுரேஷ்மாதவடியான் என்றால் சரிதான். ராஜன்துரையின் மகன் வழக்கு 4ம் பிரதிவாதி சேகர் என்றால் சரிதான். மாடக்கண் நாடார் மகன்கள் மூன்று பேர் பெயரிலும் 2004ம் ஆண்டில் இருந்தே பட்டா இருந்து வருகிறது என்றால் சரிதான் ஆனால் அவர்களுக்கு அந்த இடத்தில் சொத்து இல்லை. அவர்கள் சொத்தை மாற்றம் செய்துள்ளார்கள். யாரிடம் மாற்றிக்கொண்டார்கள் என்றால், நல்லதம்பி நாடாரிடம் மாற்றிக்கொண்டார்கள். இந்த விவரத்தை பிராதில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். மாடக்கன் நாடார் மக்கள் பெயரில் பட்டா இருப்பது சம்பந்தமாக ஆட்சேபனை தெரிவித்து நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் அது தவறு நடவடிக்கை எடுத்தேன். சரியான முறையில் எனக்கு முடிவு கிடைக்கவில்லை அதனால் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். எனக்கு 2004ல் மாடக்கண் நாடார் மக்கள் பெயரில் பட்டா இருந்த விவரம் தெரிய வந்தவுடன் எப்போது என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால், அவர்கள் புறம்போக்கை இடத்தை அனுபவித்து வந்தார்கள் எந்த இடைஞ்சலுக்கும் என்னிடம் வரவில்லை 2020ல் பத்திரத்தை போட்டுவிட்டு இடைஞ்சல் செய்ததால் வழக்கு தாக்கல்

செய்தேன், பத்திர பதிவு அலுவலகத்திலும் புகார் கொடுத்துள்ளேன். இந்த விவரத்தை நான் பிராதில் சொல்லியுள்ளேனா என்றால், தெரியவில்லை நடந்தது இதுதான். புறம்போக்கு இடத்தில் பிரதிவாதிகள் 2004ம் ஆண்டுக்கு வீடு கட்டியிருந்தார்களா அல்லது அதற்கு பின்பு வீடு கட்டினார்களா என்றால், வீடு கட்டவில்லை ஆட்டுப்பிறை வைத்துள்ளார்கள் ஆட்டுப்பிறை வைத்து சுமார் 7 வருடம் இருக்கும். ஆட்டுப்பிறை வைத்து 7 வருடம் இருக்கும் என்ற விவரத்தை எனது பிராதில் சொல்லியுள்ளேனா என்றால், அவர்கள் புறம்போக்கில் வைத்திருக்கிறார்கள் அதற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. பட்டாவில் கண்ட 4வது பட்டாதாரர் செல்லத்தாய்தான் எனக்கு வா சா ஆ 1 மூலம் கிரையம் தந்த நபர் என்றால் சரிதான். வா.ச ா ஆ 1 கிரைய பத்திரத்தில் சொத்து விவரத்தில் மாடக்கண் நாடார் சொத்திற்கும் தெற்கு என்று மால் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா சா ஆ 1 பத்திரம் எழுதும்போதே வடக்கில் மாடக்கண் நாடார் சொத்து என்று மால் காண்பித்துள்ள விவரமானது தவறு என்று தெரிந்துதான் மால் காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் இல்லை. செல்லத்தாய் அம்மாளுக்கு மொத்த சொத்தில் எவ்வளவு சொத்து இடம் பாத்தியம் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எல்லா ஆவணமும் தாக்கல் செய்திருக்கிறேன். செல்லத்தாய் அம்மாளுக்கு தனிப்பட்டா எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். எனது பெயருக்கும் தனிப்பட்டா இல்லை என்று சொன்னால் சரிதான். மொத்தம் உள்ள 92 சென்டில் எப்படி செல்லத்தாய் அம்மாளுக்கு 23 சென்ட் எவ்வாறு பர்ததியம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும் பூர்வீக சொத்து ஆகும். செல்லத்தாய் அம்மாளுக்கும் மாடக்கண் நாடாருக்கும் என்ன உறவு என்றால், ஒரே ஊரைச்சார்ந்தவர்கள்தான். அவர்களுக்கு என்ன உறவுமுறை என்றால் மாமன் மச்சான் என்று பேசிக்கொள்வார்கள் என்ன உறவுமுறை என்று எனக்கு தெரியாது. 92ல் சென்டில் உள்ள 4 பங்குதாரர்கள் யார் யார் என்றால், செல்லத்தாய் அம்மாளுக்கு ஒரு பங்கும் அம்பையா ஜெயராஜ் என்பவருக்கு ஒரு பங்கும் வேல்நாடார், இசக்கிமுத்து நாடார்-க்கு ஒரு பங்கும், தேன்மொழி, செல்லம்மாள், முத்து, சுடலைமுத்து, அவர்களுக்கு ஒரு பங்கும் உண்டு. தாவா சொத்தில் பாகம் ஏற்பட்டதை காட்ட எந்த ஆவணமும் இல்லாத நிலையில் தாவா சொத்தை பொறுத்து நான் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் மாடக்கண் நாடார் மக்களுக்கும் உரிமை இருக்கிறது

என்ற சொன்னால் சரியல்ல. நான் நான்கு பங்கு என்று வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல உண்மையை தான் சொல்லுகிறேன். நான்கு பங்கு பற்றியவிவரம் வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பத்திரத்தில் சொல்லவில்லை. தாவா சொத்தில் வடக்கு ஓரம் வழக்கு பிரதிவாதி வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் அது தவறு அங்கு வீடே கிடையாது. வழக்கு பிரதிவாதி அவர் வசிக்கும் வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டும் என்று மின்சார வாரியத்தில் மனு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் கொடுக்கக்கூடாது என்று தடங்கல் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி அவர் குடியிருக்கும் வீட்டிற்கு வீட்டு வரி செலுத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நான் வா சா ஆ 1 ஆவணத்தில் சொல்லப்பட்ட எல்கை விவரங்களுக்கு மாறாக பிராதில் வடக்கு கிழமேல் ரோடு என உண்மையை மறைத்து எல்கை விவரம் குறிப்பிட்டுள்ளேன்என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் வடக்கு மாடக்கண் நாடார் இடம் என்று சொல்லியிருப்பதற்கு முரணாக பிராதில் தபசில் விவரத்தில் வடக்கு எல்கையில் கிழமேல் ரோடு என குறிப்பிட்டுள்ளேன் அதற்கு பிராதில் எந்த விளக்கமும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். சொத்தை நான்கு பங்காக வைத்துள்ளதாக சொல்லியுள்ளேன் கீழ்பக்கம் யார் இடம் உள்ளது என்றால் தர்மன் நாடார் இடம் உள்ளது. தெற்கே உள்ள நபர்களுக்கு பாதை இருப்பதாக வா சா ஆ 1 பத்திரத்தில் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அசல் வழக்கு எண் 11/2001 வழக்கு தாக்கல் செய்த காலத்திலேயே இவ்வழக்கு 1ம் பிரதிவாதியின் தகப்பனார் மாடக்கண் நாடார் பிராது தபசில் சொத்தில் வீடு அமைத்து அனுபவித்து வந்தார் எனவே தான் மாடக்கண் நாடாரை தரப்பினராக அசல் வழக்கு 11/2001ல் சேர்க்கவில்லை என்று சொன்னால் அது தவறு. தாவா சொத்தையோ பட்டா இடத்தையோ மாடக்கண் நாடார் அனுபவிக்கவில்லை புறம்போக்கைதான் அனுபவித்து வந்தார். வா சா ஆ 5, 6 ஆவணங்கள் மாடக்கண் நாடார் தரப்பினர் இல்லாத காரணத்தினால் இந்த தீர்ப்பு பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் அது தவறு. நான் இந்த வழக்கில் பிரதிவாதி கட்டியுள்ள வீடு புறம்போக்கு இடத்தில் உள்ளதா அல்லது தாவா சொத்தில் உள்ளதா

என்பதை நியமிக்க  நீதிமன்ற ஆணையர் நியமிக்கவில்லை என்று சொன்னால்  நான் எல்லா ஆவணங்களும்  தாக்கல் செய்திருக்கிறேன்.

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க கு வி தொடர்ச்சி வேறுதேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.